ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

8. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு, 2024 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

பிற்பகல் 1–30

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2024), மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2024 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எடுத்துக்கொள்கிறேன். திரு. வேல்முருகன் பேசியதற்கு எதுவும் பதில் இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: சேர்த்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, ஒரு வார்த்தை கேளுங்கள். திரு. வேல்முருகன் கேட்டால் நாமும் கேட்க வேண்டுமோ!

திரு. ஜி.கே. மணி: அதற்காக இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமைப்பதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு தேசிய நெடுஞ்சாலை இல்லை. தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்.

திரு. ஜி.கே. மணி: தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் அமைப்பதற்கு விதிகள் சொல்லுகிற வேளையில், அதில் சுங்கச் சாவடி அமைக்கப்படுமா அல்லது எவ்வளவு கிலோ மீட்டர் தொலைவுக்கு அமைக்கப்படும் என்று ஏதாவது வரையறை செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவித்தால், அது எல்லோருக்கும் தெளிவாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நெடுஞ்சாலையை நேர்விற்கேற்ப, கட்டுமானம், மேம்பாடு, பராமரிப்பு அல்லது மேலாண்மை போன்றவற்றை செய்தல் வேண்டும் என்பதன் அடிப்படையில் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் அமைக்கப்படுகிறது. பொதுவாக, தமிழ்நாட்டிலிருக்கிற பெரும்பான்மையான சாலைகள் எல்லாம்

[திரு. எ.வ. வேலு] [2024 பிப்ரவரி 22

ஒன்றிய அரசாங்கம், குறிப்பாக 7 மீட்டர் சாலையை உடனே இரண்டு பக்கங்களிலும் ஒன்றரை மீட்டர், ஒன்றரை மீட்டர் என்று 10 மீட்டராக்கி அதற்கெல்லாம் பல இடங்களிலே சுங்கச் சாவடிகளெல்லாம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களிலே NHAI மூலமாக பல சாலைகளை எடுத்து, தமிழ்நாட்டில் சாலைகள் அமைத்துவிட்டு, நேரடியாக அவர்கள் சுங்கக் கட்டணம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தளவுக்கு நாளுக்கு நாள் போக்குவரத்து கூடிக்கொண்டே போகிறது. அதையெல்லாம் குறைக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் இந்த 3 ஆண்டு காலத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி, தங்களுடைய பகுதி, தங்களுடைய தாலுகா, தங்களுடைய மாவட்டம் என்ற அடிப்படையிலே கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்களையெல்லாம் பார்க்கிறபோது, இன்னும் 10 ஆண்டு காலத்திற்கு நிதிநிலை அறிக்கையில் நாம் தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கினால்கூட சிலவற்றைச் செய்து முடிக்க முடியாது; தேவைகள் அதிகமாக இருக்கின்றன. இல்லையென்று யாரும் மறுத்துவிட முடியாது. பாலம் கட்டுவது, புறவழிச் சாலை அமைப்பது போன்ற தேவைகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், மாநில அரசாங்கத்தினுடைய நிதி அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, ஒன்றிய அரசாங்கம் அவ்வப்போது toll gate அமைத்து அதை விரிவுபடுத்திக் கொண்டு வசூல் என்ற அடிப்படையிலே எடுத்துக் கொண்டு போவதைவிட, நேரடியாக மாநில அரசாங்கத்தினுடைய நிதியும் இந்த நேரத்தில் ஈடுகொடுக்க முடியாது என்பதை உணர்ந்த காரணத்தினால்தான் தமிழக அரசிற்கு நேரடியான கட்டுப்பாட்டில் ஓர் ஆணையத்தை உருவாக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதே நேரத்திலே அந்த ஆணையத்திற்கு மூத்த IAS அதிகாரிகள் சிலரை நியமிக்க வேண்டும். அரசினுடைய விதிகளுக்குட்பட்டு துறையிலே இருக்கிற மூத்த பொறியாளர்கள் நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதிலே மாநில அரசாங்கத்தினுடைய பெரும்பான்மை நிதிகளை நாம் பயன்படுத்தப்போகிறோம். இது ஒன்று. இன்னொன்று, இப்போது நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்ற பொறியாளர்களை வைத்துக்கொண்டு உலக வங்கியிலே,

2024 பிப்ரவரி 22] [திரு. எ.வ. வேலு]

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை போன்றவற்றிடமிருந்து கடன்களைப் பெற்று உடனே அந்தப் பணிகளைச் செய்வதற்கு சற்று காலதாமதம் ஏற்படுகிறது. இப்படியொரு ஆணையத்தை நிறுவுவதன் மூலமாக இந்தப் பணிகளை தனியாகச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. மேலும், உலக வங்கியிலே நாம் நேரடியாகக் கடனைப் பெறலாம். அதேநேரத்தில் இதுபோன்ற பணிகளிலே ஈடுபடுகிறபொழுது, மக்களுடைய தேவைகளையறிந்து, மக்களுடைய பிரதிநிதிகளின் கோரிக்கைகளை அறிந்து, விரைந்து சுறுசுறுப்பாக அந்தப் பணிகளைச் செய்வதற்காகத்தான் இந்த ஆணையத்தை நாம் அமைக்கிறோம். பொதுவாக toll gate அமைப்பது குறித்து, இப்போது முடிவு செய்ய முடியாது. ஏனென்றால், அதற்கு ஆணையத்தை அமைத்து, அதற்கான சட்ட திட்டங்களையும், விதிகளையும் வகுத்துக்கொண்டிருக்கிறோம். நிதித் துறைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று முடிவு செய்த பின்பு, ஆணையத்தின் மூலமாகத்தான் இதுகுறித்து முடிவு செய்ய முடியும். இப்போது சட்டமுன்வடிவைக் கொண்டு வருகிறோம். பல முன்னெடுப்புகளில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக இருக்கின்ற மாநிலம் நம்முடைய மாநிலம் என்பதன் அடிப்படையில் State Government அதாவது, மாநில அரசாங்கத்திற்கென ஓர் ஆணையத்தை உருவாக்குவதன் மூலமாகத்தான் மக்களுடைய தேவைகளை நாம் பூர்த்தி செய்ய முடியும். மக்கள் பிரநிதிகளாக இருக்கிற உங்களுடைய தேவைகளை அரசே பூர்த்தி செய்ய முடியும். விரைந்து வங்கிகளில் கடன் பெற்றுத்தான் செய்ய வேண்டிய ஒரு நிலை உள்ளது. போதுமான அளவுக்கு மாநில நிதியால் ஈடு கொடுக்க முடியவில்லை. தேவைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், ஆணையத்தினை நாம் உருவாக்குகிறோம். பிற்காலத்தில், மக்களுடைய கருத்துகள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துகளையெல்லாம் கேட்டு, 50 கிலோமீட்டர், 60 கிலோ மீட்டர் இடைவெளியில் toll gate அமைத்து வசூல் செய்து, மாநில நிதிக்குக் கொண்டு வருவதா என்பதையும் குறித்து பேசுகிற நிலையில், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளுக்கெல்லாம் மாநில அரசாங்கம் மதிப்பளிக்கும். ஆகவே, விரைந்து நிதியினைப் பெறுவதற்கும், சாலைகளை அமைப்பதற்கும்தான் இந்த ஆணையத்தை மாநில அரசாங்கம் அமைக்கிறது.

[2024 பிப்ரவரி 22

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 32 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 32 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2024 பிப்ரவரி 22] [திரு. எ.வ. வேலு]

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2024) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இன்னும் 10 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2024), மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2024)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 22-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.